**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்**

**O.S.No. 398/2017**

| | |
|---|---|
| பெயர் | : ரவிசந்திரன் |
| தந்தை பெயர் | : குப்புசாமி |
| வயது | : 55 |
| தொழில் | : கிராம நிர்வாக அலுவலர் ( வானமாதேவி கிராமம் ) |
| முகவரி | : ராமாபுரம் |

1969-ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 02.07.2025 அன்று **செல்வி. பா.பெபேயா, பி.ஏ., எல்.எல்.பி.,** கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் 3 -ம் தரப்பினர் ஆவேன். என்னை வாதி தரப்பு சாட்சி -2 ஆக மீட்டும் விசாரணை செய்யவும் எனது முதல் விசாரணையை பதிவு செய்யவும் ஆஜராகியுள்ளேன்.

முதல் விசாரணை

வழக்கு சொத்து கடலூர் தாலுக்கா கோதண்டராமாபுரத்தில் உள்ளது என்றாலும் அதை பற்றிய விவரம் தெரியுமா என்றால் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப்பார்த்தால் தான் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான். ஆவணம் Ex .X1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சியரிடம் வாதி ஜெயச்சந்தின் கொடுத்த புகாரின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் மூலம் வட்டாட்சியருக்கு அனுப்பட்டது என்றால் சரிதான். வருவாய் ஆய்வாலர் அறிக்கையில் கோதண்டராமபுரம் ரிசர்வே எண் 11/8 ல் 0.08.0 ஏர்ஸ்ல் முனிசாமிகவுண்டர் என்பவர் பெயரில் இருப்பதாகவும் அதனை வேலுமணி என்பருக்கு

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.07.02 18:23:52 +0530

அத்துகளை உடைத்து ஏர் பூட்டி  உழுது சாகுபடி செய்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முனிசாமி கவுண்டருக்கு யார் யார் வாரிசுகள் என்று குயிப்பிட்டுள்ளேன் என்றால் ஆவணங்களைப் பார்த்து குறிப்பிட்டுள்ளேன்.

ஆவணம் Ex .X1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.07.02 18:24:02 +0530